## இந்தியாவில் இருக்கக் கூடிய எல்லா மாநிலங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் –

# பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் பாதுகாப்பான மாநிலம் தமிழ்நாடுதான்!

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் – ஒன்றிய அரசின் தரவுகளைச் சான்று காட்டி – நயினார் நாகேந்திரனுக்கு ஆணித்தரமான விளக்கம்!

சென்னை, பிப்.20-

**சட்டப்பேரவையில் நேற்று பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் பேச்சின் நடுவே குறுக்கிட்டுப் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "நாட்டிலேயே பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் பாதுகாப்பான மாநிலம் தமிழ்நாடுதான்" என்று ஒன்றிய அரசின் தரவுகளைச் சான்று காட்டி ஆணித்தரமான விளக்கமளித்தார்.**

சட்டப்பேரவையில் இது தொடர்பாக நடைபெற்ற விவாதம் வருமாறு:

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :** பாரதிய ஜனதா கட்சியினுடைய தலைவர், மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் நீட் தேர்வு பற்றிச் சொன்னார். நான் கேட்க விரும்புவது, இப்போது உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது; மத்தியில் நீங்கள்தான் ஆட்சியில் இருக்கிறீர்கள். இப்போதாவது நீட் தேர்வுக்கு விலக்களிக்க முன் வருவீர்களா என்ற கேள்வியைத்தான் நான் கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு நீங்கள் பதில் சொல்லுங்கள்.

மணிப்பூர் கணக்கையும் நீங்கள் சேர்த்து சொன்னால் சரியாக இருக்கும்.

இந்தியாவில் இருக்கக்கூடிய மாநிலங்களையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய நேரத்தில், பெண்களுக்கு உரிய பாதுகாப்பும், குழந்தைகளுடைய பாதுகாப்பும், தமிழ்நாட்டில்தான் பாதுகாப்பு சிறப்பாக இருக்கின்றது என்று உங்களுடைய ஒன்றிய அரசு தந்திருக்கக்கூடிய குறிப்பே தெளிவாகத் தந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பாரதிய ஜனதா கட்சி ஆளுகிற மாநிலங்களில்தான் இன்றைக்கு கலவரங்களும், பெண்களுக்குப் பாதுகாப்பில்லாத சூழ்நிலையும் இருக்கிறது என்பதையும் ஆதாரங்களோடு நான் விளக்குவதற்குத் தயாராக இருக்கிறேன். அதனை ஏற்றுக் கொள்ள உறுப்பினர் தயாராக இருக்கிறாரா?

நீங்கள் (நயினார் நாகேந்திரன்) பேட்டி கொடுத்ததை நானும் பார்த்தேன். இதுசம்பந்தமாகச் சொல்லும் போது 'மோடி மஸ்தான்'மாதிரி வேலை இருக்கிறதே என்று நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். (சிரிப்பு) அவர் பிரதமரையா சொன்னார் என்ற சந்தேகத்தில் நான் சொல்லிவிட்டேன். (சிரிப்பு) நீங்கள் 'மோடி மஸ்தான்' என்று சொல்லியிருப்பது TVயில் ஒளிபரப்பாகியிருக்கிறது. தவறி சொல்லியிருக்கலாம். ஆனால், 'மோடி மஸ்தான்' வேலையைச் செய்துவிட்டார்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். (சிரிப்பு)

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஒவ்வொருவருக்கும் 15 இலட்ச ரூபாய் அவரவர்களுடைய வங்கிக் கணக்கில் வரவு வைப்போம் என்று சொன்னீர்கள். (சிரிப்பு) அது என்ன ஆயிற்று? அதைச் சொல்லிவிட்டு இதையெல்லாம் சொல்லுங்கள். நன்றாக இருக்கும். (சிரிப்பு) (குறுக்கீடு)

**நயினார் நாகேந்திரன் :** நீட் தேர்வு வருவதற்கு முன்னால், மொத்தமாக ஆண்டொன்றுக்கு வெறும் 43 கிராமப்புற மாணவர்களுக்கு மருத்துவப் படிப்பில் இடம் கிடைத்தது. ஆனால், தற்போது அந்த 7.5 சதவிகித ஒதுக்கீடு கொடுத்ததற்குப் பிறகு, அன்றைக்கு மத்தியில் சுகாதாரத் துறை அமைச்சராக இருந்த பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்த ஜெ.பி.நட்டா அவர்களிடம் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த EPS அவர்கள் பேசி, 7.5 சதவிகித ஒதுக்கீடு கொடுத்ததன் அடிப்படையில், இன்றைக்கு ஆண்டொன்றுக்கு 543 மாணவர்கள் சேர்கின்றனர். (மேசையைத் தட்டும் ஒலி)

**அமைச்சர் தங்கம் தென்னரசு :** நான் ஒரே ஒரு கேள்வியைக் கேட்கிறேன். உறுப்பினர், BJP தலைவர், 7.5 சதவிகிதத்தைக் கொண்டு வந்தவர் திரு. நட்டா, BJPயினுடைய தலைவர் அவர்கள் என்று இங்கே சொல்கிறார்கள். அதை இப்போது புதிதாக கூட்டணியில் சேர்ந்திருக்கக்கூடிய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் அதை ஏற்றுக்கொள்கிறதா, இல்லையா என்பதை நான் இங்கே கேட்க விரும்புகிறேன்.

**நயினார் நாகேந்திரன் :** கடந்த 3 ஆண்டுகளில் மட்டும், பெண்களுக்கெதிரான குற்றங்கள் 50.71 சதவிகிதம் தமிழகத்தில் அதிகரித்துள்ளதாக தேசிய மகளிர் ஆணையம் ஒரு கருத்துக் கணிப்பு தெரிவித்திருக்கிறது.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :** மணிப்பூர் கணக்கையும் நீங்கள் சேர்த்து சொன்னால் சரியாக இருக்கும்.

**நயினார் நாகேந்திரன் :** ஆட்சிப் பொறுப்பேற்றதும் ஆயிரம் ரூபாய் தருவோம் என்று சொன்னார்கள். ஆனால், பாராளுமன்றத் தேர்தல் வந்தபிறகுதான் கொடுத்தார்கள். நான் கேட்பது என்னவென்றால், கொடுத்தது, சொல்லியது தவறு என்று சொல்லவில்லை. இப்பொழுது ஐந்தாயிரம் ரூபாய் சேர்த்து கொடுத்திருக்கிறார்கள். பாராளுமன்றத் தேர்தல் வரும் போது கொடுத்தால், அந்த 28 மாதமும் ஏன் அவர்கள் கொடுக்கவில்லை. அப்போது தேர்தலுக்கு கொடுத்ததாக அர்த்தமாகக்கொள்ளப்படும்,

**அமைச்சர் அர. சக்கரபாணி :** சென்ற ஆண்டுதான் கொடுக்கவில்லை. அதற்கு முந்தைய ஆண்டு கொடுத்தோம். ஆனால், அதே போன்று அஇஅதிமுக ஆட்சியில் இரண்டு ஆண்டுகள் பொங்கலுக்கு பணம் கொடுக்கவில்லை. அதே கூட்டணியில் இருப்பதால், அதையும் கேட்டு அவையிலே பேசுங்கள்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :** நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஒவ்வொருவருக்கும் 15 இலட்ச ரூபாய் அவரவர்களுடைய வங்கிக் கணக்கில் வரவு வைப்போம் என்று சொன்னீர்கள். (சிரிப்பு) அது என்ன ஆயிற்று? அதைச் சொல்லிவிட்டு இதையெல்லாம் சொல்லுங்கள். நன்றாக இருக்கும். (சிரிப்பு)

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

## மதுரையில் 1.89 லட்சம் பேர் பங்கேற்கும்

# தென்மண்டல பாகமுகவர்கள் மாநாடு: கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சி உரை!

## நாடே திரும்பிப் பார்க்கச் செய்யும் மாநாடாக அமையும் – வடக்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.மூர்த்தி பேச்சு!



மதுரை,பிப்.20-

மதுரையில் வரும் 21 ஆம் தேதி தென் மண்டல வாக்குச்சாவடி கழக பாகமூவர்கள் பயிற்சி மாநாடு வெகு சிறப்பாக நடைபெற உள்ளது. இதில் 1.89 லட்சம் பாகமூவர்கள் பங்கேற்று பயிற்சி பெறுகின்றார்கள். மதுரை உத்தங்குடி கலைஞர் திடலில் நடைபெற உள்ள இந்த மாநாட்டில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுச்சி உரையாற்ற உள்ளார். இந்த மாநாடு தமிழ்நாட்டில் இதுவரை இல்லாத அளவிற்கு தமிழ்நாட்டையே திரும்பிப் பார்க்க செய்யும் மாநாடாகவும் 2026 சட்டமன்றத் தேர்தலில் மாபெரும் வெற்றியை தேடித் தரும் மாநாடாக அமையும் என கலைஞர் திடலில் நடைபெற்ற அனைத்து அணி அமைப்பாளர்கள், நிர்வாகிகள், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி பேசினார், அதன் விவரம்.

மதுரை உத்தங்குடி கலைஞர் திடலில் நாளை 21/2/2026 ஆம் தேதி மாலை வேலையில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தென் மண்டல பாகமுகவர்கள் பயிற்சி மாநாட்டில் பங்கேற்று எழுச்சி உரையாற்ற உள்ளார். இந்த மாபெரும் மாநாட்டில் மதுரை, திண்டுக்கல், விருதுநகர், தேனி, சிவகங்கை, ராமநாதபுரம், தென்காசி, நெல்லை, கன்னியாகுமரி உள்ளிட்ட 20 மாவட்டங்களைச் சேர்ந்த 58 தொகுதிகளுக்கு உட்பட்ட சுமார் 1.89லட்சம் பிஎல்ஏ2, பிஎல்சி மற்றும் பிஎல்டி பாகமுகவர்கள் பங்கேற்க உள்ளனர்.



முன்னதாக விழாவில் பங்கேற்க வருகை தரும் கழகத் தலைவர் முதல்வர் அவர்களுக்கு மதுரை மீனாட்சி மிஷின் மருத்துவமனை முதல் விழா மேடை வரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பல்லாயிரக்கணக்கான பெண்கள், நிர்வாகிகள், கையில் இருவர்ணக் கொடி ஏந்தி உற்சாக வரவேற்பு கொடுக்கின்றனர்.

மாநாட்டு நுழைவாயில் மிக பிரமாண்டமாக அனைவரும் பார்த்து மகிழும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் விழாவில் பங்கேற்க வருபவர்கள் அனைவருக்கும் வாகனம் நிறுத்தும் இடமும், போக்குவரத்து நெரிசலின்றி விழா மைதானத்திற்கு வரும் வகையில் பிரத்தியேக சாலை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. வெளிநபர்கள் யாரும் உள்ளே வராத வகையில் க்யூஆர் கோடு மூலம் பதிவு செய்த நபர்கள் மட்டுமே விழா அரங்கிற்குள் அனுமதிக்கப்பட உள்ளனர்.

மேலும் விழாவில் பங்கேற்கும் அனைவருக்கும் அவர்கள் இருப்பிடத்திற்கே உணவு, பிஸ்கட், தண்ணீர் பாட்டில் உள்ளிட்ட பொருட்கள் சிறப்பாக தலைவர், துணை முதல்வர், படத்துடன் பொறித்த பையில் கருப்பு சிவப்பு துண்டுடன் வழங்கி அவர்களை மகிழ்விக்க பிரத்தியேக ஏற்பா'டுகள் செய்யப்பட்டுள்ளது.

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும் மேடை கம்பீரமாக அமைக்கப்பட்டு மாநாடு திடல் முழுவதும் மின் விளக்குகள் அமைக்கப்பட்டு மாலை நேரமே பகல் போல் மின்னொளியில் மின்னும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தொகுதி வாரியாக தனித்தனியாக முகவர்கள் அமரும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டு அவர்களுக்கு உணவு வழங்க தயார் நிலையில் தனித்தனித் தனி குழுவினர்கள் இருப்பார்கள்.

ஒருவருக்கு கூட உணவு, குடிநீர் இல்லை என்று எவரும் கூறிடாத வகையில் சிறப்பாக ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளது.

மேலும் எல்லோரும் இருக்கையில் அமர்ந்து பார்க்க அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளது. மேலும் குடிநீர் வசதி, சுகாதார வசதி, தீயணைப்புத் துறை, கழிப்பறை வசதி என அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளது.

### பிரம்மாண்ட மேடை

மாநாட்டில் இதுவரையில் எங்கும் அமைக்கப்படாத வகையில் பிரம்மாண்ட மேடை அமைக்கப்பட்டு, கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமைச்சர் பெருமக்கள், மாவட்ட செயலாளர்கள், கழக முன்னணி நிர்வாகிகள் அமர்ந்து பார்க்கும் வகையில் சிறப்பான ஏற்பாடுகள் எல்இடி வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இந்த தென்மண்டல பாகமூவர்கள் பயிற்சி மாநாடு இதுவரையில் தமிழ்நாட்டில் எங்கும் நடைபெறவில்லை என்ற சிறப்பை பெறும் வகையில் இது தமிழ்நாட்டில் நடைபெற உள்ள 2026 சட்டமன்ற பொதுத்தேர்தலில் 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் திமுக கூட்டணி மாபெரும் வெற்றியை தேடித் தரும் மாநாடாக அமையும் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் இருக்கும் என்பதில் மாற்றமில்லை என்று மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பேசினார்.

கூட்டத்தில் வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், பகுதி, வட்டக்கழக செயலாளர்கள், நிர்வாகி கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமை! கே.ஏழுமலை எம்.சி - வடபழனி டி.கமல் - எஸ்.பாஸ்கர் எம்.சி. முன்னிலை!

# தியாகராயர் நகர் 130 வது வட்டத்தில் "என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச் சாவடி" மாபெரும் பொதுக்கூட்டம்!

## மருத்துவர் நா.எழிலன் எம்.எல்.ஏ - மயிலை த.வேலு எம்.எல்.ஏ - தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. சிறப்புரை!

சென்னை, பிப். 20

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் கிழக்கு மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் 130 வது வட்டத்தில் "என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி, தமிழ்நாடு தலை குனியாது" மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (20.02.2026 வெள்ளிக்கிழமை) மாலை 6 மணிக்கு, வடபழனி, கங்கையம்மன் கோயில் தெருவில் நடைபெறுகிறது.

தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர், கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஜெ. கருணாநிதி தலைமை வகிக்கிறார்.

தியாகராயர் நகர் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி, 130 வது வட்டக் கழகச் செயலாளர் வடபழனி டி.கமல், தியாகராயர் நகர் மேற்கு பகுதிக் கழகப் பொருளாளர் எஸ்.பாஸ்கர் எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எம்.பழனிகிராமணியார், என்.ராமகிருஷ்ணன், தட்சன் ஹரிஹரன், ந.மோ.முரளி, கே.எஸ்.வெல்டிங் ராஜா, பி. ஜெயக்குமார், பி.மாரி, மு.ம.செந்தில்குமார், வழக்கறிஞர் எம்.கிருஷ்ணமூர்த்தி, ஆர். சக்திவேல், ஜி.பி.செந்தில் குமரன், ஆர்.லோகு, மு.செல்வகுமார், வழக்கறிஞர் எஸ்.லட்சுமிகாந்தன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இப்பொதுக்கூட்டத்தில் கழக மருத்துவர் அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ, மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கோ.சு. மணி, எஸ்.மோகன், ரத்தினா லோகேஸ்வரன் எம்.சி, மாம்பழம் ஆ.சந்திரசேகர், கோடம்பாக்கம் மு.சத்யா, எம்.ஆறுமுகம், ஜி.டி.அம்பேத்கார், ஜெ.ஜானகிராமன், அ.வாசுதேவன், ராஜா அன்பழகன் எம்.சி, மோனிஷா கருணாநிதி, என். எஸ்.பாலசுப்பிரமணியம், டி. மோசஸ், ஆர்.குமரன், ஜே. எஸ்.ஆர்.ஜெகன் ராஜ், எஸ். உமா சங்கர், டேன்டி பிரகாஷ், ஏ.அஸ்வின், ஏ.பொன்னுதுரை, ஆர்.மணிரத்தினம், கா.மணிகண்டன், பாண்டி பஜார் பாபா சுரேஷ், க.சந்திரசேகர், ப.சாந்தி பங்காரு, மு.மணிவண்ணன், இரா.பொன்னிவளவன், வி.பி.எஸ்.ஜெனார்த்தா, எஸ்.புஸ்பா, ஜி.மோகன்ராஜ், கே.மோகன், ஆர்.முருகேஷ் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

பில்டர் கே.சரவணன், எஸ். சரவணன், எஸ்.ஆனந்தன், வி.குமார், ஜி.தண்டபாணி, ஆர்.அப்பு (எ) விஜய ராமகிருஷ்ணன், எம்.கிருஷ்ணன் ஆகியோர் நன்றி உரை ஆற்றுகின்றனர்.




ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட, நங்கநல்லூர் பகுதி தி.மு.க. சார்பில் நடைபெற்ற தமிழ்நாடு தலை குனியாது திராவிட மாடல் நல்லாட்சியின் 5ஆம் ஆண்டு சாதனைகள் விளக்க தேர்தல் பரப்புரை பொதுக் கூட்டத்தில் கழக மருத்துவர் அணி தலைவர் கனிமொழி என்.வி.என்.சோமு மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் கலந்துக்கொண்டு உரையாற்றினார்கள். அருகில் தொகுதி பார்வையாளர் பத்மா பிரியா, மண்டல குழுத் தலைவர் என்.சந்திரன், ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் ப.குணாளன், பொதுக்குழு உறுப்பினர் எம்.எஸ். கே.இப்ராகிம், நகரச் செயலாளர் டி.பாபு, ஒன்றியச் செயலாளர் ஜி.கே.ரவி, வட்டச் செயலாளர்கள் ஜெ.நடராஜன், உலகநாதன், மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## மாநில பிரச்சார குழு செயலாளர் சேலம் சுஜாதா பயிற்சி வழங்கி சிறப்புரை!

# திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் 'வெல்லும் தமிழ்ப் பெண்கள்' பயிற்சி பாசறை கூட்டம்!

## மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ அறிக்கை!

திருவள்ளூர் பிப் 20:



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திமுக சார்பில் வெல்லும் தமிழ் பெண்கள் பயிற்சி பாசறை கூட்டம் 22.02.2026 ஞாயிற்றுக்கிழமை பகல் 3 மணிக்கு கனகம்மா சத்திரம் ஏ.ஜெ.எஸ். திருமணம் மண்டபத்தில் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ எனது தலைமையில் நடைபெறுகிறது

இதில் மாநில பிரச்சார குழு செயலாளர் சுஜாதா கலந்து கொண்டு பாசறைப் பயிற்சி வழங்குகிறார்கள்

கூட்டத்தில் ஒன்றிய கழகச் செயலாளர் கூளூர் எம்.ராஜேந்திரன் வரவேற்புரை ஆற்றுகிறார் இந்நிகழ்ச்சியில் கழக கொள்கை பரப்புச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, தொகுதி பார்வையாளர்கள் மாஸ்டர்ஸ் சேகர், சண்முகநாதன், மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிட பக்தன் , மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் ஆர்.டி.இ.ஆதி சேசன், ஓ.ஏ.நாகலிங்கம், மாஸ்டர் இ.குருதாஸ், டாக்டர் வி.சி.ஆர்.குமரன், பா. உதயமலர் பாண்டியன், சி.ஜெயபாரதி, எம்.மிதுன் சக்ரவர்த்தி, பா.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், வி. கிஷோர், மு.சுப்பிரமணியம், இராஜேஷ்வரி இரவீந்திரநாத் மற்றும் ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் மாவட்ட மகளிர் மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழக மகளிர் அணி சார்ந்த மகளிர் அணி நிர்வாகிகள் அனைத்து வாக்குச்சாவடி சார்ந்த வெல்லும் தமிழ் பெண்கள் பிரச்சாரம் மேற்கொள்வோர் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

நிகழ்ச்சி முடிவில் வெல்லும் தமிழ் பெண்கள் திருவள்ளூர் திருத்தணி தொகுதி பொறுப்பாளர்கள் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சரஸ்வதி சந்திரசேகர் மற்றும் சித்ரா நன்றி கூறுகிறார்கள்

பொருள் பிப்ரவரி 23 ஆம் தேதி முதல் மார்ச் 8 வரை வெல்லும் தமிழ்ப் பெண்கள் வீடு வீடாகப் பரப்புரை குறித்து என மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார் .




சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு ஆ.ராசா எம்.பி. ஆலோசனைகளை வழங்கினார். இதில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ மற்றும் மாநில,மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள்,அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தொகுதி பார்வையாளர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக உடன் பிறப்புக்கள் கலந்து கொண்டனர்.